செ.வெ. எண்: 330 நாள்: 07.06.2012

<u>பத்திரிக்கைச் செய்தி</u>

புதிய குடும்ப அட்டைகள் பெறுதல், மாற்றங்கள் செய்தல் மற்றும் பொது விநியோக திட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் குறித்து தமிழகம் முழுவதும் வட்டங்கள் தோறும் மக்கள் குறைதீர் கூட்டம் ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும் என அரசு அறிவித்துள்ளது. அதன் படி உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சென்னை 16 மண்டல பகுதி மக்களின் குறைகளை கேட்டு தீர்வு காணும் பொருட்டு இணைப்பில் குறிப்பிட்டுள்ள இடங்களில் சூன் 2012 மாதத்திற்கான மாதாந்திர குறைதீர் கூட்டம் 09.06.2012 அன்று காலை 10.00 மணிக்கு நடத்தப்பட உள்ளது. இதில் பொது விநியோக திட்டத்தைச் செயல்படுத்தும் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, கூட்டுறவு துறை மற்றும் தமிழ் நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொள்ளவிருக்கின்றனர். அப்பகுதியை சுற்றி வாழும் பொது மக்கள் புதிய குடும்ப அட்டைகள் வழங்குதல் மற்றும் பொது விநியோக திட்ட கடைகளின் செயல்பாடுகள் குறித்தும் பொது விநியோக திட்ட பொருள்கள் கிடைப்பது குறித்தும் தனியார் துறையில் சந்தையில் விற்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகள் வாங்கும் நுகர்வோர்கள் ஏமாற்றப்படுவது அல்லது குறைகள் இருப்பது குறித்தும் தங்களுக்கு குறைகள் ஏதேனும் இருப்பின் அவற்றை இக்கூட்டத்தில் தெரிவித்தால் குறைகளை விரைந்து தீர்வு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். சென்னையில் உள்ள 16 மண்டல பகுதி வாழ் பொது மக்கள் இந்த உரிய வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்

| வ.எண் | மண்டலம் | கூட்டம் நடைபெறும் இடங்களின் பெயர் |
|---|---|---|
| 1 | சிதம்பரனார் | கே.ராமைய்யா செட்டி ARC பெண்கள் மேல் நிலைப்பள்ளி,<br>26, சைவ முத்தையா தெரு, முத்தையால்பேட்டை, செ - 1 |
| 2 | இராயபுரம் | ஆனந்த மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளி<br>5-A, சோமுசெட்டி 8வது சந்து, சிங்காரத்தோட்டம்,இராயபுரம், செ-13 |
| 3 | பெரம்பூர் | சென்னை மாநகராட்சி சமூக நலகூடம்,<br>பள்ளபுரம், 24வது பிளாக், சத்தியமூர்த்தி நகர், வியாசர்பாடி, செ -39 |
| 4 | அண்ணாநகர் | திரு.வி.க மேல்நிலைப்பள்ளி,<br>ஷெனாய் நகர் முதல் மெயின் ரோடு, ஷெனாய் நகர், செ- 30 |
| 5 | அம்பத்தூர் | சதீஷ் பாலாஜி மெட்ரிக் மற்றும் மேல்நிலைப்பள்ளி<br>எண் 1 , காலேஜ் சாலை, மதனாங்குப்பம், செ 99 |
| 6 | வில்லிவாக்கம் | பத்மா சாரங்கபாணி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி,<br>எண் 32, குமாரசாமி நகர், வில்லிவாக்கம், செ 49 |
| 7 | திருவொற்றியூர் | பஞ்சாயத்து யூனியன் நடுநிலைப்பள்ளி,<br>தேவராஜன் தெரு, சின்ன சேக்காடு, மணலி, செ 68 |
| 8 | ஆவடி | புழல் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,<br>பள்ளிக்கூடதெரு,சூரப்பட்டு(வேலம்மாள்பொறியியல்கல்லூரிஅருகில்) செ 66 |
| 9 | தி.நகர் | சென்னை ஆரம்பப்பள்ளி,<br>கோவிந்தசாமி தெரு, எம்.ஜி.ஆர் நகர், செ 78 |

| | | |
|---|---|---|
| 10 | மயிலாப்பூர் | புனித ரபேல் பெண்கள் மேல்நிலைப்பள்ளி,<br>2 ரோசரி சர்ச் ரோடு, சாந்தோம், செ 4 |
| 11 | பரங்கிமலை | பல்லாவரம் நகராட்சி மேல்நிலைப்பள்ளி,<br>நெமிலிச்சேரி நெடுஞ்சாலை, ஜமீன் ராயப்பேட்டை , செ 44 |
| 12 | தாம்பரம் | ஊராட்சி ஒன்றிய துவக்க பள்ளி,<br>கௌல் பசார் நெடுஞ்சாலை, செ 74 |
| 13 | சைதாப்பேட்டை | புனித அந்தோணி மேல்நிலைப்பள்ளி,<br>டான்சி நகர், 14 வது தெரு, வேளச்சேரி, செ 42 ( பேபி நகர் அருகில்) |
| 14 | ஆயிரம்விளக்கு | சென்னை நடுநிலைப்பள்ளி,<br>35, வீராசாமி தெரு, எழும்பூர், செ 8 ( எழும்பூர் காவல் நிலையம் அருகில்) |
| 15 | சேப்பாக்கம் | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி,<br>நெடுஞ்செழியன் நகர், காலனி தெரு ரோடு, சிந்தாதிரிபேட்டை, செ 2 |
| 16 | சோழங்கநல்லூர் | அரசு உயர்நிலைப்பள்ளி,<br>அம்பேத்கார் சாலை, நன்மங்கலம் , செ 117 |

பெ.மு.பஷீர் அஉறமது,
ஆணையாளர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**